**இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, ஒதுக்கங்கள் மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம்

ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

----------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகள், தேறிய செயற்பாட்டுச் செலவினத்திற்காக செஸ் நிதியத்திலிருந்து மாற்றீடு செய்யப்பட்ட தொகையினை கணக்கிலெடுப்பதற்கு முன்னர் ரூபா 375.4 மில்லியன் பற்றாக்குறையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 442.5 மில்லியன் ஆகும். அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பற்றாக்குறை ரூபா 67.1 மில்லியன் அல்லது 15 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டில் நிதித்துறை நவீனப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 81.1 மில்லியன் மானியம் கிடைத்திருந்தமையே இதற்கான பிரதான காரணமாகும்.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஆணைக்குழு, செஸ் நிதியம் மற்றும் இழப்பீட்டு நிதியம் ஆகியவற்றின் பிரதான வருமான விடயங்கள் மற்றும் ஆணைக்குழுவின் பிரதான செலவின விடயங்களின் பகுப்பாய்வானது கீழ் காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | 2018 | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| **ஆணைக்குழு, ஸெஸ் நிதியம் மற்றும் இழப்பீட்டு நிதியம் ஆகியவற்றின் வருமான விடயங்கள்** | | | |
| பெறப்பட்ட ஸெஸ் வரி | 223,020,518 | 250,704,350 | 11.04 |
| ஸெஸ் நிதியத்தின் கீழான முதலீட்டு வட்டி | 264,966,403 | 264,406,422 | 0.21 |
| இழப்பீட்டு நிதியத்தின் கீழான முதலீட்டு வட்டி | 44,537,378 | 39,829,392 | 11.82 |
| **ஆணைக்குழுவின் வருமானம்** | | | |
| அரசாங்க மானியம் | 81,124,254 | - | 100.0 |
| **ஆணைக்குழுவின் செலவினம்** | | | |
| பதவியணியினர் சம்பளம் | 128,380,689 | 130,974,645 | 2.0 |
| விசேட கொடுப்பனவுகள் | 16,812,135 | 15,882,863 | 5.9 |
| பதவியணியினர் வாகனப் படி | 22,344,097 | 19,735,833 | 13.2 |
| பதவியணியினர் மருத்துவ மற்றும் காப்புறுதிச் செலவினம் | 6,962,971 | 7,148,920 | 2.6 |
| பதவியணியினர் நலனோம்பல் | 5,896,137 | 4,936,970 | 19.4 |
| வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பிரயாணங்கள் | 13,547,075 | 8,417,392 | 60.9 |
| வாடகை மற்றும் வாகன நிறுத்துமிட வாடகை | 88,188,786 | 81,979,640 | 7.6 |
| மூலதனச் சந்தை அபிவிருத்திச் செலவினம் - மொத்தம் | 53,736,624 | 85,159,152 | 36.9 |
| • மூலதனச் சந்தையும் உற்பத்திப்பொருள் அபிவிருத்தியும் | 24,669,537 | 48,933,373 | 49.6 |
| • பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 13,407,274 | 20,632,925 | 35.0 |
| • கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 3,480,812 | 3,636,294 | 4.3 |
| • சர்வதேச அங்கத்துவக் கட்டணம் – IOSCO | 3,730,324 | 3,529,660 | 5.7 |
| • பிரச்சாரம் மற்றும் விளம்பரம் | 482,114 | 233,800 | 106.2 |
| • சந்தை ஆராய்ச்சிக் கிரயம் | 7,878,105 | 8,167,459 | 3.5 |
| • புலனாய்வு மற்றும் களப்பரிசோதனைச் செலவினம் | 88,458 | 25,641 | 245.0 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட நிதித்துறை நவீனப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழான 11 அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர் 21 மில்லியன் தொகை ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு, செயற்திட்டத்தின் பெறுபேற்று அடிப்படை நிதிக்கூறின் ஒரு பகுதியாக ரூபா 81.1 மில்லியன் தொகை ஆணைக்குழுவிற்கு கிடைத்திருந்தது. மீளாய்வாண்டில், ரூபா 1 மில்லியன் பொதுச் செலவினம் மேற்கொள்ளப்பட்டமையினை தவிர்த்து, பெறுபேற்று அடிப்படை நிதிக்கூறு தொடர்பில் வெரெந்த லெவினத்தையும் ஆணைக்குழு செலவிட்டிருக்கவில்லை. அதற்கமைய, மேலே குறிப்பிட்டவாறு கிடைத்திருந்த மொத்தத்

தொகையும் மீளாய்வாண்டின் வருமானமாக (அரசாங்க மானியம்) அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மூலதனச் சந்தை மற்றும் உற்பத்திப்பொருள் அபிவிருத்திச் செலவினம் ரூபா 24.7 மில்லியன் ஆகும். இச்செலவினம் பிரதானமாக தரகர் மீள் அலுவலக முறைமை (BBO) மற்றும் கட்டளை முகாமைத்துவ முறைமை (OMS) இற்காக செலவிடப்பட்ட ரூபா 20.1 மில்லியன் அல்லது 81.4 சதவீத தொகையினையும் 2019 இல் சிங்கப்பூரில் இடம்பெற்ற முதலீட்டு மாநாட்டிற்காக செலவிடப்பட்ட ரூபா 3.4 மில்லியன் அல்லது 13.8 சதவீத்தையும் உள்ளடக்கியிருந்தது.

(இ) 1987 இன் 36 ஆம் இலக்க பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 14(பி)(2)(அ) பிரகாரம், பிணைகள் சந்தையின் அபிவிருத்திக்காக இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள செஸ் வரியிலிருந்து செலவிடப்படுதல் வேண்டும். அதற்கமைய, மீளாய்வாண்டில் மேற்கொண்ட மொத்தச் செலவினத்தில் 11.8 சதவீதம் பிணைகள் சந்தையின் அபிவிருத்திச் செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் இதற்காக 18.1 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | மீளாய்வாண்டில் புலனாய்வுப் பிரிவினால் கையாளப்பட்ட 37 முறைப்பாடுகளில் 04 முறைப்பாடுகள் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு, 01 முறைப்பாடு போதிய சான்றுகள் இல்லாமையால் தள்ளுபடி செய்யப் பட்டிருந்தது. 15 முறைப்பாடுகள் அறிக்கை சமர்ப்பிக்கும் நிலையில் காணப்பட்டதுடன், 2013 யூலை முதல் 2019 ஒக்தோபர் வரையான காலத்தில் பதிவுசெய்யப்பட் டிருந்த ஏனைய 17 முறைப்பாடுகளும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு விசாரிக்கப்பட்டு வரப்பட்டிருந்தன. | முடிவுக்கு கொண்டுவரப் படாதுள்ள விசாரணைகளை விரைவாகப் பூரணப்படுத்து வதற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | நிலுவையிலுள்ள அனைத்து விசார ணைகளையும் பூரணப்படுத்துவத ற்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். |
| ஆ. | மீளாய்வாண்டில் கூட்டிணைந்த விவகார ங்கள் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்ட பட்டியலிடல் விதிகள் மீதான ஆவணம் உள்ளிட்ட ஐந்து ஒழுங்குபடுத்தல் ஆவணங்கள் 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் ஒழுங்குபடுத்தல் குழு மற்றும் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மத்தியில் கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை. | ஒழுங்குபடுத்தல் குழுக் கூட்டங்கள் மீளாய்வாண்டில் இடம்பெற்றிருக்கவில்லை. இருப்பினும், ஒழுங்குபடுத் தல் குழுவில் இதுவரை கலந்துரையாடப்பாதுள்ள ஆவணங்களை கலந்துரை யாடுவதற்காக கிரமமான முறையில் ஒழுங்குபடுத்தல் குழுக் கூட்டங்களை நடாத் துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. | உரியபடி ஒழுங்கு படுத்தல் குழுக் கூட்டங்கள் நடாத் தப்படுதல் வேண் டும். |
| இ. | 2018 இன் முதலாவது காலாண்டின் இறுதியில் கொழும்பு பங்குகள் பரிவர்த்தனை (CSE) உடன் இணைந்து மத்திய கருமபீட தரப்புப் | DvP முறைமையினை அமுல்படுத்தும் பொறுப்பு கொழும்பு பங்குகள் பரிவர் | CCP அமுல்படுத்த லுடன் இணைந்த வகையில் DvP |

| | | | |
|---|---|---|---|
| | பொறிமுறை (CCP) இற்கு இணையாக விநியோக எதிர் கொடுப்பனவு (DvP) முறையின் அமுல்படுத்தலை பூரணப்படுத்து வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அது 2019 இன் முதலாம் காலாண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், DvP திர்ப்பனவு முறையின் அமுலாக்கம் 2020 செப்தெம்பர் 30 வரையிலும் பூரணப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | த்தனை (CSE) இற்கே உள்ளதுடன் ஆணைக்குழு அதற்கான ஒழுங்குபடுத்தல் வழிகாட்டல்களை மாத்தி ரமே வழங்குவதனை இங்கு முக்கியமாக கவனித்தல் வேண்டும். ஆகையால், DvP முறைமையின் அமுலாக்கல் செயன்முறையை துரிதப்படு த்தல் என்பது ஆணைக் குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும்.<br>மேலும், இந்தியாவிலிருந்து இதற்குத் தேவையான உபர கரணங்களை இறக்குமதி செய்யும் சவாலை தற்போது CSE எதிர்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், ஆணைக் குழு CSE உடன் இணைந்து இது தொடர்பில் கிரமமாக கருமமாற்றி வருகின்றது. | முறைமையின் அமுல்படுத்தலை பூரணப்படுத்துவத ற்கான பின்தொடர் செயற்பாடுகளை துரிதப்படுத்துதல் வேண்டும். |
| ஈ. | 1987 இன் 36 ஆம் இலக்க பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 14(பி)(2)(அ) பிரகாரம், பிணைகள் சந்தையின் அபிவிருத்திக்காக இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள செஸ் வரியிலிருந்து செலுத்துவதற்காக ரூபா 57.3 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் பாதிடப்பட்டிருந் ததுடன் அந்த நோக்கத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 24.7 மில்லின் தொகை செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், CCP செயற்திட்டம் (ரூபா 12.3 மில்லியன் பாதிடப்பட்டிருந்தது) மற்றும் அலகு நம்பிக்கை ப்பொறுப்பு இயக்கத்தின் மேம்படுத்தலிற்காக (ரூபா 10 மில்லியன் பாதிடப்பட்டிருந்தது) மீளாய்வாண்டில் எவ்வித செலவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | *CCP* செயற்திட்டத்தின் மதியுரைக் கட்டணத்திற்கான பாதிடப்பட்ட கிரயம், ஒப்பந்த முரண்பாடு காரணமாகவும் அதற்காக ஏற்றுக்கொள்ளப் படத்தக்க தீர்வொன்றை காண்பதற்கான பேச்சுவர்த் தைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றமையாலும் செலவிடப்படாதுள்ளது.<br>அத்துடன், வீதிக் காட்சிகள் மற்றும் அலகு நம்பிக்கைப் பொறுப்பு பிரச்சார நிகழ்ச்சி த்திட்டம் உள்ளிட்ட ஏனைய மூலதனச் சந்தை அபிவி ருத்திச் செயற்பாடுகள் உயிர்த்த ஞாயிறு தாக்கு தல், அரசியல் ஸ்தீரமற்ற நிலை மற்றும் 2019 இல் இடம்பெற்ற சனாதிபதி தேர்தல் என்பன காரணமாக தாமதமடைந்துள்ளன. | மூலதனச் சந்தை அபிவிருத்திச் செயற்பாடுகளிற்கு முன்னுரிமை வழ ங்குதல் வேண் டும். |
| உ | 1987 இன் 36 ஆம் இலக்க பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 14(பி)(2)(அ) பிரகாரம், பொதுமக்கள் விழிப்புணர்வூட்லுக்காக இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள செஸ் வரியிலிருந்து செலுத்தும் பொருட்டு ரூபா 29.1 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் பாதிடப்பட்டிருந் ததுடன் அந்த நோக்கத்திற்காக | சனாதிபதி தேர்தல் காரண மாக உயர்தர மாணவர்களி ற்கான வினாவிடைப் போட்டி நிகழ்ச்சியினை நடாத்த முடிந்திருக்கவில்லை. 2018 புதிய SEC சட்டம் தொடர்பான கருத்தரங்குத் தொடர் நடாத்தப்படாததுடன் | மூலதனச் சந்தை அபிவிருத்திச் செயற்பாடுகளிற்கு முன்னுரிமை வழ ங்குதல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் ரூபா 13.4 மில்லின் தொகை அல்லது 46 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | ''ஆயோஜனயட முலபுரும'' புத்தகம் உள்ளிட்ட அநேக வெளியீடுகள் புதிய சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகள் காணப்படாமை காரணமாக அச்சிடப்பட்டு அல்லது மீள அச்சிடப்பட்டிருக்கவில்லை.<br>உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் சனாதிபதி தேர்தல் என்பன காரணமாக முதலீட்டாளர்/சிறிய, நடுத்தரளவு முயற்சியாளர் கருத்தரங்குகளும் உலக முதலீட்டாளர் வாரம் 2019 நிகழ்ச்சித்திட்டமும் இடம்பெற்றிருக்கவில்லை. | |
| ஊ. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் படி, 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் ஆணைக்குழு வருமான வரியினை செலுத்துதல் வேண்டும். இருப்பினும், 2018/2019 மற்றும் 2019/2020 ஆம் மதிப்பீட்டாண்டுகளிற்கான வருமான வரியினை 2020 செப்தெம்பர் 30 வரை ஆணைக்குழு செலுத்தியிருக்கவில்லை. 2018/2019 மற்றும் 2019/2020 ஆம் மதிப்பீட்டாண்டுகளிற்கான வருமான வரி முறையே ரூபா 12.7 மில்லியன் மற்றும் ரூபா 20.6 மில்லியன் ஆகும். | நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள இறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்ட ஆணைக்குழுவின் கடிதத்தின் மூலம் 2017/2018 ஆம் மதிப்பீட்டாண்டு வரை ஆணைக்குழு அனுபவித்த வரி விலக்கு நலனை புதிய வரிச் சட்டத்தில் உள்ளடக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பதிலுக்காக ஆணைக்குழு காத்திருக்கின்றது. | சட்டத்துடன் இணங்காதுள்ளமையை தவரிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 மனித வள (எச்ஆர்) முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | 1987 இன் 36 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் 43 (2) ஆம் பிரிவின் படி, ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய விகிதங்களில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களிற்கு ஊதியம் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு உட்படுதலும் வேண்டும். மேலும் நிதி மற்றும் திட்டமிடல | இது தொடர்பில் ஆணைக்குழு கௌரவ சட்டமா அதிபரின் சட்டரீதியான அபிப்பிராயத்தை கோருயிருந்ததுடன், ஆணைக்குழு அதன் ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் ஊதியங்களை செலுத்தும் தீர்மானங்களிற்காக எந்தவொரு முன்கூட்டிய அங்கீகாரத்தை அல்லது ஒத்திசை | பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரையின் பிரகாரம், ஆணைக்குழு தனது ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் ஊதியங்கள் செலுத்துதல் தொடர்பாக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவிய |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சுச் செயலாளரின் 1992 மார்ச் 31 திகதிய கடிதத்தின் படி ஆணைக்குழு தனது ஊழியர்களை நியமிக்கவும் மற்றும் அவர்களது சம்பளங்கள், பிற ஊதியங்களை அரசாங்க விதிமுறைகளை கருத்தில் கொள்ளாமல் நிர்ணயிக்கவும் சலுகை பெற்றுள்ளது.<br><br>அதன் படி, ஊழியர்களின் சம்பள அளவு மற்றும் விசேட வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த படி, ஊழியர்களின் மருத்துவ செலவு, ஊழியர்களின் வாகன படி மற்றும் சிறப்பு கொடுப்பனவு போன்ற பிற ஊதியங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டது.<br><br>இருப்பினும், 2018 செப்ரம்பர் 18 ஆந் திகதிய பொது முயற்சிகள் குழுவின் (COPE) பரிந்துரையின் பிரகாரம், ஆணைக்குழு தனது ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளம் மற்றும் ஊதியங்கள் தொடர்பாக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் ஒப்புதலை பெற வேண்டும். ஆணைக் குழுவினால் 2020 செப்தெம்பர் 30 வரையிலும் அத்தகைய ஒப்புதல் பெறப்பட் டிருக்கவில்லை. | வினை பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற சட்டரீதி யான தேவைப்பாடு கிடை யாது என சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியி ருந்தார். | ணிகள் ஆணைக் குழுவின் ஒப்புத லை பெற வேண் டும். |
| ஆ. | 2017 திசெம்பர் 31 இல் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 96 ஆக இருந்ததுடன் மேற்கூறிய பதவியணிக்கான அனுமதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டிருந்தது. 2018 ஜனவரி 22 இல் நடைபெற்ற 404 வது ஆணைக்குழு கூட்டத்தில், 1992 மார்ச் 31 திகதிய திறைசேரியின் செயலாளரினால் வழங்கப்பட்ட உத்தரவான ''ஆணைக்குழுவே பதவியணியின் அமைப்பை தீர்மானிக்க வேண்டும் என்பதுடன் கடந்த காலங்களில் நடைமுறையில் இருந்த ஒப்புதல் பெறுவதை நிறுத்த வேண்டும் என்ற சான்றின் படி ஆணைக்குழு ஆளணியை நியமிக்க சுதந்திரமாக இருக்கும்'' என்பதற்கமைய ஆணைக்குழுவின் பதவியணி 96 இலிருந்து 137 ஆக அதிகரிக்கப்பட்டது.<br><br>இருப்பினும், 2018 யூலை 18 திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படாது ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் சம்பளங்களையும் படிகளையும் அதிகரிப்பதிலிருந்து அதிகாரத் தரப்பினர் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். | மேலே குறிப்பிட்ட கௌரவ சட்டமா அதிபரின் அபிப்பிரா யத்தின் படி, ஆணைக் குழுவின் ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் சம்பளங்களையும் படிகளை யும் அதிகரிப்பதற்காக நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகா ரத்தை பெறவேண்டிய தேவை ஆணைக்குழுவிற்கு இல்லை. | பதவியணியை 41 ஆல் அதிகரிப்பத ற்கு முகாமைத் துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற ப்படுதல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆனால், 41 ஊழியர்களால் பதவியணியினை அதிகரிப்பதற்காக அவ்வாறானதோர் அங்கீ காரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டிருக்க வில்லை. | | |
| இ. | மூலதனச் சந்தை அபிவிருத்தி பணிப்பாளர், புலனாய்வுகள் பணிப்பாளர், மனித வளங்கள் பணிப்பாளர், மேற்பார்வை பணிப்பாளர் மற்றும் நிதி நிர்வாகப் பணிப்பாளர் ஆகிய பதவிகள் 2017 திசெம்பர் 31 முதல் 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தொடர்ந்து வெற்றிடமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆணைக் குழு ஏற்கனவே எடுத்துள் ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை வழ ங்கப்பட வேண்டு ம். |
| ஈ. | ஆணைக்குழுவில் இணைக்கப்பட்டிருந்த ஒரு உத்தியோகத்தர் 2016 ஏப்ரல் 19 முதல் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். இருப்பினும், போக்குவரத்து படி மற்றும் பிற நன்மைகள் தவிர்த்து அவரது மொத்த மாத சம்பளத்தில் அரைவாசிக்கு சமனான தொகை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை உபபிரிவு 31.11 இற்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. அவர் சார்பாக 2016 ஏப்ரல் 20 முதல் 2018 ஒகஸ்ட் 31 வரை ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட அரைமாத சம்பள செலவு ரூபா 5,212,815 ஆகும். 2018 செப்ரம்பர் 18 திகதிய பொது முயற்சிகள் குழுக் (COPE) கூட்டத்தின் பரிந்துரையின் படி, ஆணைக்குழு சம்பளம் கொடுப்பதை நிறுத்த வேண்டு மென்பதுடன் செலுத்திய மொத்தச் சம்பளத்தை மீளப்பெறுவதற்கான ஏற்பாடு களையும் செய்ய வேண்டும். அதன்படி, 2018 செப்ரம்பர் முதல் அரைமாத சம்பளக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டதுடன் 2018 நவம்பர் 15 திகதிய கடிதத்தினால் மேற்குறிப்பிட்ட தொகையை மீள செலுத் துமாறு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப் பட்டது. இருப்பினும், அத்தொகை 2020 செப்தெம்பர் 30 வரையிலும் ஆணைக்குழு வினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சேவையிலிருந்து இடைநிறு த்தப்பட்ட ஊழியருக்கு அரை மாதச் சம்பளம் செலுத்துவதனை ஆணைக் குழு இடைநிறுத்தியதுடன் செலுத்தப்பட்டுள்ள தொகை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்க ளில் காண்பிக்கப்பட்டுள் ளது. மேலும், மேற்குறிப் பிட்ட ரூபா 5.2 மில்லியன் தொகையை தீர்க்குமாறு பல விடுத்தங்கள் ஞாபகப் படுத்தல் கடிதங்களை ஆணைக்குழு அனுப்பியுள் ளது. | பொது முயற்சி கள் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் செலுத்த ப்பட்ட மொத்த சம்பளத்தினை மீளப்பெறும் நடவ டிக்கையினை துரிதப்படுத்துதல் வேண்டும். |

**4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான 18 செலவின விடயங்களிற்கு இடையே 33 சதவீதம் முதல் 354 சதவீதம் வரையான வீச்சில் விலகள்கள் காணப்பட்டமையால், பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | 2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தாக்கம் காரணமாக மூலதனச் சந்தை அபிவிருத்தி, பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டச் செயலவினங்கள் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டன. | பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படுதல் வேண்டும். |